குவாலிபிகேஷன் குறைவாக இருந்தால் எக்சம்பஷன் கொடுத்து அவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே—எஸ். எஸ். எல். சி. படித்தவர்களாக இருந்தால்தான் அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலோ அல்லது கார்ப்பரேஷனிலோ பணியாற்ற முடியும் என்ற நிலைமை இருப்பதால்—அவர்கள் எந்த வகுப்புவரை படித்திருந்தாலும் கூட, அவர்கள் ஐந்தாவது வகுப்பு, ஆறாவது வகுப்புவரை படித்திருந்தால்கூட அவர்களுக்கு எக்சம்ப்ஷன் கொடுத்து அவர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே அப்படிப்பட்ட வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போன்று இதை இரண்டு முறையிலே அணுக வேண்டும். ஒன்று, 50 பேருந்துகளுக்கு மேலாக உள்ள நிறுவனங்களை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற சட்டம் வந்தபொழுது தனியார் துறையிலே இருந்தவர்கள் அந்தத் தகுதி உடையவர்களாக இருந்தாலும் அந்தத் தகுதியில்லாதவர்களாக இருந்தாலும் அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அதற்குப் பிறகு மீண்டும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தோம். ஒவ்வொரு மாவட்டமாக நாட்டுடைமைத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது அது. அதிலே தனியார் துறையிலே பணியாற்றியவர்களுடைய தகுதி என்னவாக இருந்தாலும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலைமைதான் இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டம் தலைமை நீதி மன்றத்திலே இருப்பதாலே நாம் அவர்களை நேராக எடுத்துக்கொள்ளவில்லை.

பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்

* 330 வினா—**திரு. த. சோனையா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் புதிய முறையில் வடிவங்களாக்கப் பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆம். புது பேருந்துகளின் நீளத்தை 33 அடி வரை அதிகரித்து, உட்காரும் இருக்கைகளின் எண்ணிக்கை, நகர, வெளியூர் மற்றும் துரித பேருந்துகளில் முறையே 62, 72, 60 என்று அமைக்கப்பட்டுள்ளது.

1974 மார்ச் 7]

(முற்பகல் 10-00)

திரு. த. சோனையா: தலைவரவர்களே, நம்முடைய போக்கு வரத்துத் துறை அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போல் மதுரையிலே நடைபெறும் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அங்கே இந்த வண்டிகளைப் புதுமையாகத் தயாரித்திருக்கிறது. அது புது மாதிரியாக இருப்பதோடு அல்லாமல் நல்லபடியாகவும் இருக்கிறது. ஆகவே, செலவிலேயும் சிக்கனத்தை ஏற்படுத்தியிருக் கிறது. அந்த முறையைப் பார்த்து மற்ற போக்குவரத்துக் கழகங்களும் மதுரையிலே பாண்டியன் போக்குவரத்துக் கழகத் தால் தயாரிக்கப்பட்ட வண்டிகளைப்போல் இந்த மாநிலம் பூராவும் தயாரித்து விடுவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் அத்தகைய ஒரு புது வகையான முறையில் கட்டுவதற்கு முயற்சி செய்து அந்த முயற்சியின் விளைவாக அப்படிப்பட்ட பேருந்துகள் ஓடிக்கொண் டிருக்கின்றன. 'மினி பஸ்'கள் என்று, அலுமினிய ஷீட்டுகள் பயன்படுத்துவதுகூட குறைக்கப்பட்டிருக்கிறது. மற்ற போக்கு வரத்துக் கழகங்களும் அப்படி மேற்கொள்ளலாமா என்பது பற்றி அரசாங்கம் உண்மையிலேயே பரிசீலிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், அந்நிய நாடுகளில் 'ஜிப்னி' பஸ்கள் என்று பயன்படுத்தப்படுகின்றன. எனவே, நெருக்கடியுள்ள இடங்களில் இப்படிப்பட்ட சிறிய சிறிய ஜிப்னி பஸ்களை விடுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: முதலிலே அந்நிய நாடுகளிலேயிருந்து வந்துள்ள நாகரீகமான மினி பஸ்ஸை விட்டுவிட்டு, பிறகு அதைப் பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]